தினமணி

Friday, January 21, 2011 1:43 PM IST









சென்னை

# சென்னையில் விரைவில் தீவிர எய்ட்ஸ் நோய் தடுப்பு மருந்து மையம்: சுகாதாரத் துறை முதன்மைச் செயலர்

First Published : 19 Jan 2011 01:51:54 AM IST



சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஹெச்.ஐ.வி. பாதித்த குழந்தைகள் சந்திப்பு நிகழ்ச்சியில் பேசுகிறார் தமிழ்நாடு சமூக நல வாரியத் தலைவர் சல்மா. உடன் நடிக

சென்னை, ஜன. 18: சென்னையில் தீவிர (இரண்டாம் நிலை) எய்ட்ஸ் நோய் தடுப்பு மருந்து மையம் விரைவில் தொடங்கப்படும் என சுகாதாரத் துறை முதன்மைச் செயலர் வி.கு. சுப்புராஜ் கூறினார்.

தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் சார்பில் சென்னையில் ஹெச்.ஐ.வி. பாதித்த குழந்தைகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டது. விளையாட்டு, ஓவியப் போட்டி, இசை நிகழ்ச்சிகளில் குழந்தைகள் பங்கேற்று தங்களுடைய திறனை வெளிப்படுத்தினர்.

நிகழ்ச்சியை தொடங்கிவைத்து, குழந்தைகள் அனைவருக்கும் புதிய ஆடைகளை வழங்கிய சுகாதாரத் துறை முதன்மைச் செயலர் சுப்புராஜ் பேசியது:

இதய நோய், சிறுநீரக நோய், சர்க்கரை நோய் என பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் பெரும் அளவில் உயர்ந்து வருகிறது. ஹெச்.ஐ.வி. நோய் பாதிப்பும் அதிகரித்து வருகிறது.

இந்த பாதிப்புக்கு எந்தவித நோய் தடுப்பு முறைகளும் இல்லாத காலத்தில் உலக அளவில் 30 லட்சம் பேர் மரணம் அடைந்தனர்.

இப்போது தடுப்பு முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதால் ஹெச்.ஐ.வி. பாதித்தவர்களுக்கு உடனடி மரணம் இல்லாத நிலை உருவாகியுள்ளது.

இந்தியாவைப் பொருத்தவரை தமிழகத்தில்தான் ஹெச்.ஐ.வி. நோய் தடுப்பு முயற்சிகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் நோய் பரவுதல் வெகுவாகக் குறைந்துள்ளது.

ஹெச்.ஐ.வி. பாதிப்பு குழந்தைகள் நல அறக்கட்டளை உருவாக்கப்பட்டு, அதற்கு ரூ. 5 கோடி நிதியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. இந்தத் தொகையை தனியார் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் உதவியுடன் ஓராண்டில் ரூ. 25 கோடியாக உயர்த்தும் முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

மற்ற நோய்களுக்கு இல்லாத அளவில், ஹெச்.ஐ.வி. நோய் தடுப்பு முயற்சிகளுக்கு மட்டும் ஆண்டுக்கு ரூ. 120 கோடி தமிழகத்தில் ஒதுக்கப்படுகிறது. இதுபோல் பரிசோதனை மையங்களும், சிகிச்சை மையங்களும் தமிழகத்தில் அதிக அளவில் உள்ளன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் எய்ட்ஸ் நோய் தடுப்பு மருந்து மையங்கள் அமைக்கப்பட்டு, ஹெச்.ஐ.வி. பாதித்தவர்களுக்கு மருந்துகள்

புகைப்படங்கள்


நந்தலாலா


இளைஞன்


புத்தாண்டு தரிசனம்!


தூங்காநகரம்


நடிகை அஞ்சலி


ஆயிரம் விளக்கு

மேலும் படங்கள்...

பிற செய்திகள்

காமன்வெல்த் டேக்வாண்டோ போட்டிகள்: சென்னையில் ஜனவரி 28-ல் தொடக்கம்

அரசு பஸ்ஸில் பெண்ணின் தலை, குழந்தையின் உடல் கண்டெடுப்பு; சென்னையைச் சேர்ந்தவரா?

ஜனவரி 25-ல் மாணவர் காங்கிரஸ் 2-வது கட்ட தேர்தல்

பால் உற்பத்தியாளர்கள் போராட்ட முடிவு: ஆவின் பால் விநியோகம் பாதிக்கும் அபாயம்

ஜனவரி 25-ல் தேசிய வாக்காளர் தினம்: சென்னையில் 1 லட்சம் பேருக்கு வாக்காளர் அடையாள அட்டை

மார்க்சிஸ்ட் பிரமுகர் படுகொலை: ஜி.ராமகிருஷ்ணன் கண்டனம்

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ரூ.9 லட்சம்

அளிக்கப்பட்டு வருகின்றன.

இதுபோல் தீவிர எய்ட்ஸ் நோய் தடுப்பு மருந்து மையங்கள் சேலத்திலும், தாம்பரத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. தேவை அதிகரித்திருக்கும் காரணத்தால் சென்னையிலும் தீவிர எய்ட்ஸ் நோய் தடுப்பு மருந்து மையம் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆறு மாத காலத்தில் இந்த மையம் தொடங்கப்பட்டு விடும் என்றார்.

நிகழ்ச்சியில் பேசிய லயோலா கல்லூரி சமூக ஒருங்கிணைப்புத் துறை இயக்குநர் ஜி. ஜோசப் அந்தோணி சாமி, " ஹெச்.ஐ.வி. பாதித்த மாணவர்களுக்கு லயோலா கல்லூரியில் உயர் கல்வி படிக்க முன்னுரிமை அளிக்கப்படும்' என்றார்.

தமிழ்நாடு சமூக நல வாரியத் தலைவர் சல்மா, தமிழக அரசின் குழந்தைகள் நலக் குழு தலைவர் டாக்டர் மனோரமா, நடிகை குஷ்பு உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசினர்.

Email Print Delicious Digg Facebook Twitter

கருத்துகள்

**உங்கள் கருத்தை முதலாவதாகப் பதிவு செய்யுங்கள்**

உங்கள் கருத்தைப் பதிவு செய்யுங்கள் *

(Press Ctrl+g or click this to toggle between English and Tamil)

இ-மெயில் *

பெயர் *

சரிபார்ப்பு எண் *

7728525

மேற்காணும் எண்ணை பதிவு செய்க *

குறிப்பு: வாசகர்கள் பதிவு செய்யும் கருத்துகள் ஆசிரியர் குழுவின் பார்வைக்கு பிறகே வெளியிடப்படும். வாசகர்களின் கருத்துகள் தினமணியின் கருத்துகள் அல்ல. வாசகரின் கருத்துக்கான முழுப் பொறுப்பும் அவரையே சாரும். நாகரீகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம். தனி நபர் தாக்குதலை, கட்டுரைகளுக்குப் பொருத்தமில்லாத கருத்துகளை வாசகர்கள் இங்கே இடவேண்டாம். வாசகர்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு வாய்ப்பளிக்கும் இந்தப் பகுதியைத் தவறாக பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். நாகரீகமற்ற கருத்துகள் குறித்து எங்கள் கவனத்துக்கு கொண்டுவந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இழப்பீடு: உயர் நீதிமன்றம் உத்தரவு

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் திருக்கோயில் பணியாளர்கள்

போரூரில் விபத்து: மினி லாரி மோதி 3 பேர் பலி

இடையூறு இல்லாமல் பள்ளி செயல்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்: உயர் நீதிமன்றம் உத்தரவு

கடன் பத்திரங்கள் வெளியீடு: ஐடிஎப்சி அறிவிப்பு

இளநிலைப் பொறியாளர் பணியிடங்களுக்கான தேர்வு

சென்னை கம்பன் கழகம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு பேச்சு, கட்டுரைப் போட்டி

செவ்விலக்கியச் சீன நாடகம்!

மாதா அமிர்தானந்த மயி 25-ல் சென்னை வருகை

செல்போன் டவரில் தீ

சுற்றுலா பொருட்காட்சியில் புகையிலை விளம்பரத்தை அகற்றக் கோரிக்கை

சென்னை அறிவியல் விழா: ஜனவரி 29-ல் தொடக்கம்

டிவிஎஸ் மோட்டார்ஸ் லாபம் ரூ. 55 கோடி

செல்போன் எண்ணை மாற்றாமல் சேவை நிறுவனத்தை மாற்றலாம்